


# நாளைய உலகிற்கு
# ஒளி ஏற்றுவோம்!

ஆனந்தம்
இளைஞர் நல அமைப்பு
**Anandham Youth Foundation**

# ஆனந்தம்

இளைஞர் நல அமைப்பு

**‘தனி மனிதனை மட்டுமல்ல; ஒரு தலைமுறையையே மாற்றும் சக்தி கல்விக்கு மட்டுமே உண்டு'**

## உயர் கல்வி கனவை நனவாக்கும் ஆனந்தம் !

12 ஆம் வகுப்புக்குப் பிறகு படிக்க வசதி இல்லாத மாணவ – மாணவியருக்கு 100% உதவித்தொகை வழங்கி, உயர்கல்வி படிக்க வைத்து வருகிறது 'ஆனந்தம்'. தமிழ்நாட்டின் கிராமங்களில் இருந்து சென்னைக்கு வந்து, வெவ்வேறு துறைகளில் வெற்றிகரமாக இயங்குகிற சமூக ஆர்வம் கொண்ட இளைஞர்கள் ஒன்று சேர்ந்து ஆனந்தம்' அமைப்பை நடத்துகின்றனர்.

2012 ஆம் ஆண்டு 30 மாணவர்களோடு தொடங்கப்பட்ட ஆனந்தம், 'பணம் இல்லாத நமக்கெல்லாம் உயர்கல்வி சாத்தியமில்லை' என நினைத்த பலரின் வாழ்வில் ஒளியேற்றி வைத்திருக்கிறது. 2017 வரை I.A.S, Doctor, Engineer, Advocate உள்ளிட்ட எல்லா வகையான உயர் படிப்புகளிலும் 186 பேருக்கு உயர்கல்வி வழங்கி வருகிறது.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| Medicine | 17 | Engineering & NIT | 86 | Agri | 7 | Advocate | 1 |
| Arts and Science | 50 | Diploma | 13 | Ted | 2 | IAS | 2 |
| Nursing | 4 | B.P.E.S. | 2 | B.Arch | 1 | BSW | 1 |

உயர்கல்வியைத் தாண்டி ஒவ்வொரு மாணவருக்கும் சிறப்பு வாழ்வியல் பயிற்சித் திட்டத்தை ஆனந்தம் செயல்படுத்துகிறது. இதன் மூலம் வெறுமனே மருத்துவர்கள், பொறியாளர்கள் போன்ற பட்டதாரிகளை உருவாக்காமல், வாழ்வின் சவால்களைத் தன்னம்பிக்கையோடு எதிர்கொண்டு, உள்ளும் புறமும் ஆனந்தமாகவும், சமூக அக்கறையோடும் வாழும் நல்ல மனிதர்களை உருவாக்குவதே ஆனந்தம் அமைப்பின் லட்சியம்.

இதன் வழியாக தாம் கற்றதை, பெற்றதை சமூகத்திற்கு வழங்கும் அற்புதமான மனிதர்கள் நிறைந்த அடுத்த தலைமுறையை ஆனந்தம் உருவாக்குகிறது.



“ஆனந்தம்” மாணவர்களில் சிலர்...

# ஆனந்தம் மாணவர்களின் பின்னணி

- ஆனந்தம் அமைப்பின் வழியாக உயர்கல்வி பயிலும் மாணவர்கள் அனைவரும் அரசுப்பள்ளிகளில் பயின்றவர்கள்.
- இவர்களில் அப்பா, அம்மா இருவரையுமோ அல்லது ஒருவரையோ இழந்தவர்கள் அதிகம்.
- பெற்றோர் இருந்தாலும் உடல் நலன் பாதிக்கப் பட்டவர்களாக, அன்றாடக் கூலித் தொழிலாளர்களாக இருப்பார்கள்.
- ஆனந்தமோ அல்லது வேறு யாரோ உதவியிருக்காவிட்டால், உயர்கல்வி படித்திருக்க முடியாது என்ற மிக,மிகப் பின்தங்கிய பொருளாதார சூழலில் இருந்து வந்தவர்கள்.
- தலைமை ஆசிரியர்கள் வழியாகவும், நேரடியாகவும் அனுப்பப் படும் விண்ணப்பங்களைப் பரிசீலித்து, ஆனந்தம் தன்னார்வலர்கள் அவர்களின் வீடுகளுக்கே சென்று ஆய்வு செய்தபிறகே மாணவர்களைத் தேர்ந்தெடுக்கிறோம்.
- உண்மையிலேயே தேவை உள்ள, தகுதியானவர்களுக்கு உதவி கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தேர்வு முறைகளை மிகக்கவனமாக கையாள்கிறோம்





**இதன்படி தேர்வான மாணவர்களில் சிலர்:**

**S. Vigneshwaran**
B.Tech - Mechanical, NIT - Trichy



ஒரு நாளில் இரண்டு வேளை சாப்பிடுவதற்கே கஷ்டமான குடும்ப நிலைமை. இவர் ஒரே ஒரு முறை கூட சினிமாவுக்கோ, ஓட்டலுக்கோ போனதில்லை.அப்பா, இதய நோயாளி. அம்மா, தினக்கூலி. இத்தகைய சூழலிலும் ப்ளஸ் டூவில் 1187 மதிப்பெண்கள் பெற்றார். எப்படியாவது இடம் கிடைக்காத என கோடீஸ்வரர்கள் முட்டி மோதிக் கொண்டிருக்கும் NIT கல்வி நிறுவனத்தில் விக்னேஸ்வரனுக்கு இடம் கிடைத்தது. கவுன்சிலிங்கிற்குக் கூட நண்பன் கொடுத்த சட்டையைப் போட்டு வந்த இவரை தேர்ந்தெடுத்து ஆண்டுதோறும் ஒன்றரை லட்சம் ரூபாய்க்கு மேல் கட்டணமாக செலுத்தி படிக்க வைக்கிறது ஆனந்தம்.

**L. Saravanakumar, M.B.B.S,**
Govt. Medical College, Salem



இவரின் அப்பா சாயப் பட்டறை கூலித்தொழிலாளி. விபத்தில் இடுப்பு எலும்பு முறிந்து வீட்டோடு இருக்கிறார் அம்மா. டாக்டராக வேண்டும் என்பது சரவணக்குமார் சிறுவயதிலிருந்தே சுமந்த கனவு. அதற்கான மதிப்பெண்களைப் பெற்றும் குடும்ப வறுமையால் படிக்க முடியாமல் தவித்தார். அவரது கனவுக்கு உயிர் கொடுத்து டாக்டருக்கு படிக்க வைக்கிறது ஆனந்தம்.

**L. Sasipriya, B.Com,**
Sengamala Thayaar Women's College, Mannarkudi



ஒரு வயதிலேயே அப்பா தவறிவிட, அம்மாவும் கைவிட பாட்டியிடம் வளர்ந்தவர். பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்ததே பெரிய விஷயம் என்றானது. 'மேலே படிக்க வேண்டும்; ஆடிட்டராகி சாதித்துக் காட்ட வேண்டும்' என்ற அவரின் ஆசைக்கு உருவம் கொடுக்கிறது ஆனந்தம்.

**V. Sangeetha, B.Tech - I.T,**
Anna University - CEG Campus



அந்தச் சின்னஞ்சிறு குடிசைக்குள் நுழைந்த எவரும் ஒருகணம் மூச்சடைத்துப்போவார் ஆமாம் அந்தளவுக்கு கோப்பைகளாலும் கேடயங்களாலும் நிரம்பி இருக்கிறது சங்கீதாவின் வீடு. மீன் பிடித் தொழிலாளியின் மகளாகப் பிறந்து அவர் வாங்கி குவித்த பரிசுகள்தாம் அவை. நல்ல மதிப்பெண்கள் எடுத்தும் உயர்கல்விக்குப் போக முடியாமல் நின்ற இவர் ஆனந்தம் வழியாக அண்ணா பல்கலைக்கழகத்தில் சேர்ந்தார். படித்து முடிக்கும் முன்பே பன்னாட்டு நிறுவனத்தில் பணி வாய்ப்பினையும் பெற்றுள்ளார்.

**P. Vignesh,**
B.E - Metallurgical Engineering, PSG College Of Technology, Covai



என்ன படிப்பது எனத் திணறிக் கொண்டிருக்கும் மாணவர்களிடையே உலோகவியல் துறையில் விஞ்ஞானியாக வேண்டும் என்ற கனவைச் சுமந்தபடி வளர்ந்தவர். ப்ளஸ் டூவில் தகுதியான மதிப்பெண் பெற்றும், கூலிக்கு சோப்புத்தூள் விற்கும் தந்தையால் அதற்கு மேல் அவருக்கு உதவிட முடியவில்லை. ஆனந்தம் கொடுத்த ஆதரவுக்கரத்தைப் பிடித்துக் கொண்ட விக்னேஷ், படிக்கும்போதே தன் பேராசிரியருடன் சேர்ந்து ஆராய்ச்சி செய்கிறார்.

**E. Uma, B.E - Civil,**
Chennai Institute of Technology



கட்டிட கலை நிபுணராக ஆசை. வாத நோயால் பாதிக்கப்பட்ட அப்பாவோ, ஆடு மேய்க்கும் அம்மாவோ அதற்கெல்லாம் பணம் தரும் நிலையில் இல்லை. பள்ளியில் படிக்கும் போதே விளையாட்டில் வெற்றிகளைக் குவித்த அவருக்கு வாழ்க்கையில் தோற்றுவிடுமோ என்ற பயம் ஏற்பட்டது. 'இல்லையில்லை. உன்னாலும் ஜெயிக்க முடியும் உமா..' என்று அவருக்கு நம்பிக்கையூட்டி கனவை நோக்கி கைப்பிடித்து அழைத்துச் செல்கிறது ஆனந்தம்.

**Karthik.K, B.E -**
Aeronautical Engineering, Madras Institute of Technology



குடியால் குடை சாய்ந்த தமிழ்நாட்டுக் குடும்பங்களில் இவருடையதும் ஒன்று. நாள் முழுக்க தையல் எந்திரத்தை மிதித்த தாயால் சாப்பாடு மட்டும்தான் போட முடிந்தது. ஆசிரியர் ஒருவரின் ஆதரவுடன் படித்து, 1,168 மதிப்பெண்கள் வாங்கிய கார்த்திக் , அவரது விருப்பப்படியே ஆகாயத்தில் பறப்பதற்கான அறிவியலைச் சொல்லித்தரும் Aeronautical Engineering படிக்கிறார். டாக்டர் அப்துல்கலாம் படித்த படிப்பை, அவர் படித்த அதே கல்லூரியில் சாதாரண கிராமத்தில் இருந்து வந்த கார்த்திக்கிற்கு சாத்தியமாக்கி இருக்கிறது ஆனந்தம்.

**ஆனந்தம் படிக்க வைக்கும் ஒவ்வொரு மாணவர்களும்**
**இத்தகைய பின்னணியில் இருந்து வந்தவர்களே!**

# கல்வியோடு வாழ்வியல் பயிற்சிகள்

முழு கல்விக்கட்டணம், விடுதி, உணவு என படிப்பு தொடர்பான அனைத்திற்கும் உதவுவதோடு முடியவில்லை ஆனந்தத்தின் பணி. பாடப்புத்தகங்கள் சொல்லித்தராத வாழ்வியல் பயிற்சிகள், தமிழகத்தின் தலைசிறந்த நிபுணர்களைக் கொண்டு மாணவர்களுக்கு தொடர்ச்சியாக வழங்கப்படுகின்றன.

இதனை Skills & Life Values என இரண்டாக பிரித்து தனி பயிற்சித்திட்டமாக வகுத்து மாணவர்களுக்கு வழங்குகிறது ஆனந்தம். வாழ்வின் முன்னேற்றத்திற்குத் தேவையான Skills பயிற்சியில்

•Spoken English •Stress less Studying Formulas •Mark Scoring Techniques •Employment Opportunities •Self Confidence •Communication Skills •Removing Inferiority Complex •Facing Challenges •Hard work •Taking responsibility •Team Work போன்றவற்றுக்கான பயிற்சிகளை வழங்குகிறோம்.

தொலைந்து போய்க் கொண்டிருக்கும் Life Values களைச் சொல்லித்தரும் பயிற்சியில்,

•Social responsibility •Humanity •Respecting people •Unconditional love •Parenting care •Forgiveness •Tolerance • Gratitude • Accepting People as they are •Emotional Intelligence •Helping others •Egoless life •Celebrating life •Containment உள்ளிட்டவற்றை கற்பிக்கிறோம்.

இவை தவிர யோகா, உடற்பயிற்சி போன்றவற்றுக்கும் உரிய வழிகாட்டுதல்களைத் தருகிறோம்.

ஒவ்வொரு மாணவருக்கும் பயிற்சி பெற்ற தன்னார்வலரை வழிகாட்டியாக நியமிக்கிறோம்.

இவற்றின் மூலம் பட்டதாரிகளை மட்டுமல்லாது, நற்பண்புகள் நிறைந்த, சிறந்த மனிதர்களையும் உருவாக்குகிறது ஆனந்தம்.








# விதைகள் விழுதுகளாயின!

ஆனந்தம் தேர்வு செய்து படிக்க வைத்து, வாழ்வியல் பயிற்சிகள் வழங்கிய மாணவ – மாணவியர் முன்னணி நிறுவனங்களில் பணிவாய்ப்பினைப் பெற்றுள்ளனர். அவர்களில் சிலர்:

**R. Prabhu,** Infosys



இரண்டு வயதிலேயே தாய், தந்தை இருவரையுமே இழந்து விட்டு தாய் மாமாவின் அரவணைப்பில் வளர்ந்தவர் பிரபு. 12 ஆம் வகுப்பில் 1166 மதிப் பெண்களுடன் நாகப்பட்டினம் மாவட்டத்திலே முதல் இடம் பிடித்த பிரபுவுக்கு அதற்கு மேல் படிக்க வசதி யில்லை. கவுன்சிலிங் வருவதற்கே பணமின்றி தவித்த அவர், சென்னை அண்ணா பல்கலைக்-கழகத்தில் 4 ஆண்டுகள் படித்து முடித்தார். பிரபு இப்போது புகழ் பெற்ற Infosys நிறுவனத்தின் பொறியாளர்.



Infosys

**S. Sridevi,** TCS



மாரடைப்பால் தந்தை மறைந்துவிட ஒரு தையல் எந்திரத்தை வைத்துக் கொண்டு மகளை வளர்த்தார் ஸ்ரீதேவியின் அம்மா. நல்ல மதிப்பெண்களுடன் ப்ளஸ் டூ முடித்த இவரை சாஸ்த்ரா பல்கலைக்-கழகத்தில் பி.காம்., படிக்க வைத்தது ஆனந்தம். இப்போது TCS நிறுவனத்தில் பணிபுரிகிறார்.



TCS

**R. Divya,** Matrimony,com



12 ஆம் வகுப்பில் பள்ளியில் முதலிடம் பிடித்த திவ்யாவின் அப்பா அம்மா இருவரும் விவசாயக் கூலித்தொழிலாளர்கள். ஆனந்தம் மூலம் B.E - E.C.E in Chennai Institute of Technology படித்த இவர், இப்போது Matrimony.com நிறுவனத்தில் வேலைவாய்ப்பினைப் பெற்றிருக்கிறார்.




Matrimony.com

**E. Kumararaja,** Govt. Medical College




விவசாயக் கூலித் தொழிலாளர்களான தம்பதிக்கு மகனாக பிறந்த குமாரராஜாவின் லட்சியம் டாக்டர் படிப்பு. தேவையான மதிப்பெண்கள் பெற்று, மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைத்தும் பணமின்றி கலங்கிய இவருக்கு கைகொடுத்தது ஆனந்தம். தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரியில் எம்.பி.பி.எஸ் படிக்க வைத்தது. இப்போது படித்து முடித்து விட்டு, அந்தக் கல்லூரியிலேயே பணியாற்றுகிறார்.



Govt. Medical College

**G. Vijayalakshmi,** Accenture



கிராமத்து சந்தையில் கூலி வேலை பார்க்கும் தந்தைக்கு மகளாகப் பிறந்தவருக்கு, பள்ளிப்படிப்பை முடிப்பதற்குள்ளே மூச்சு முட்டிப் போனது. படித்த ஊரில் முதலிடம் பிடித்தாலும் அதற்கு மேல் படிக்க முடியாது என்று நினைத்திருந்தார். 'முடியும்' என்று சொல்லி, சேலம் அரசுப் பொறியியல் கல்லூரியில் அவரை ஆனந்தம் படிக்க வைக்க, முடிக்கும் முன்பே Accenture நிறுவனத்தில் வேலை வந்து சேர்ந்தது. வீடு,வீடாக பூ வியாபாரம் செய்தபடியே படித்த விஜயலட்சுமியின் வாழ்க்கை வண்ண மலராக மலர்ந்துள்ளது.



**Accenture**

**S. Srinivasan,** IBM



திருவாரூர் அருகில் ஏழை விவசாயக்குடும்பத்தில் பிறந்த சீனிவாசன், ப்ளஸ் டூவில் பள்ளியில் முதலிடம் பிடித்தவர். இருந்தாலும் மேற்கொண்டு படிக்க வழியில்லாததால் மருந்தகம் ஒன்றில் வேலைக்குச் சேர்ந்துவிட்டார். தலைமையாசிரியர் வழியாக சீனிவாசன் பற்றி அறிந்த ஆனந்தம் அவரை, அழைத்து வந்து சென்னை இன்ஸ்ட்டியூட் ஆஃப் டெக்னாலஜி கல்வி நிறுவனத்தில் பி. ஈ. படிக்க வைத்தது. இறுதியாண்டு பயிலும் போதே சீனிவாசனுக்கு புகழ் பெற்ற IBM நிறுவனத்தில் வேலை கிடைத்துவிட்டது.



**IBM**

**இவர்களைப் போன்றே ஆனந்தம் வழியாக படித்து, பல்வேறு நிறுவனங்களில் பணி வாய்ப்பினைப் பெற்றிருக்கிற மாணவர்களின் குடும்பங்களில் மிகப்பெரிய மலர்ச்சியும், மகிழ்ச்சியும் உருவாகி உள்ளது. அவர்களின் தலை முறையே புதிய பாதையில் பயணம் தொடங்கி இருக்கிறது.**

### ஆனந்தம் விழுதுகள்!

படித்து முடித்து வேலைக்குப் போன ஆனந்தம் மாணவ – மாணவியர் ஒன்று சேர்ந்து தம்மை உருவாக்கிய சமூகத்திற்கு நன்றி செலுத்தும் விதமாக 'ஆனந்தம் விழுதுகள்' என்ற திட்டத்தைத் தொடங்கி உள்ளனர். இதன் மூலம் மாதந்தோறும் அவர்களால் இயன்றதை ஆனந்தம் உயர்கல்வி உதவித்திட்டத்திற்கு வழங்கி வருகிறார்கள்.

ஆனந்தம் விதைத்த விதைகள், இச்சமூகத்திற்கு ஆனந்தம் விதைத்த விதைகள், இச்சமூகத்திற்கு விழுதுகளாக மாறுவதில் மகிழ்ச்சி.

## தலைமுறைகளை மாற்றும் நல்ல உள்ளங்கள்!

மிகச்சாதாரண நிலையில் இருந்த மாணவர்களின் வாழ்வில் நிகழ்ந்திருக்கிற, நிகழ்ந்து கொண்டிருக்கிற இத்தகைய தலை மேலான மாற்றங்கள் எல்லாம் சாத்தியமானது உங்களைப் போன்ற நல்ல உள்ளங்களால் தான்! மனநிறைவோடு பலர் வழங்கிய பங்களிப்புதான் ஆனந்தம் மாணவர்களின் கனவுகளை நனவாக்கி இருக்கிறது.

'எங்கோ ஒரு கிராமத்தைச் சேர்ந்த, முகம் தெரியாத மாணவருக்கு உதவ வேண்டும்' என்ற நல்லெண்ணத்தோடு எத்தனையோ பேர் அளித்த ஒவ்வொரு ரூபாயும், உழைப்புமே இத்தனை மாணவர்களின் வாழ்வை மாற்றியிருக்கிறது.

நாம் அளிக்கும் பணம் முழுக்க மாணவர்களின் கல்விக்கு, உரிய முறையில் செலவிடப்படுகிறது. கல்விக்கு உதவ ஆனந்தமே சரியான தளம்' என்ற நம்பிக்கையோடு உங்களைப் போன்றவர்கள் தரும் உற்சாகத்தில் ஆனந்தம் அமைப்பின் பயணம் தொடர்கிறது.

## நீங்களும் உதவலாம்

***கல்வியின் மூலம் சமூக மாற்றத்தை ஏற்படுத்தும் ஆனந்தம் அமைப்பின் பயணத்தில் தங்களையும் இணைத்துக் கொள்ள...***

- ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மாணவர்களின் கல்விக்கட்டணத்தை ஏற்கலாம்.
- முழுத்தொகையையும் வழங்க இயலா விட்டாலும் தங்களால் இயன்ற அளவுக்கு உதவலாம். அவை அனைத்தும் ஒன்று சேர்க்கப்பட்டு, மாணவர்களின் கல்விக்கு பயன் - படுத்தப்படும்.
- மொத்தமாக உதவ முடியாதவர்கள் மாதந்தோறும் இயன்ற தொகையினை அளிக்கலாம்.
- தங்களின் பிறந்த நாள், திருமண நாளின் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ள, ஒரு மாணவரின் கல்விக்கு இயன்ற வகையில் உதவலாம்.
- தங்களுக்கு தெரிந்த கல்லூரி நிர்வாகத்திடம் பேசி ஆனந்தம் மாணவர்கள் கட்டணம் இல்லாமல் படிக்க உதவலாம்.
- தாங்கள் பணியாற்றும் அல்லது தங்களுக்குத் தெரிந்த நிறுவனங்களின் CSR நிதியை (Corporate Social Responsibility Fund) பெற்றுத் தரலாம்.
- ஆனந்தம் அமைப்பில் தன்னார்வலராக (அ) உறுப்பினராக இணைந்து மேலும் பல மாணவர்களின் வளமான வாழ்க்கைக்குத் துணை நிற்கலாம்.

## ஆனந்தம் – மகிழ்ச்சி திட்டம்

கல்விக்கு உதவும் உள்ளம் படைத்த மாத ஊதியதாரர்கள், வணிகர்கள் உள்ளிட்டோரின் வசதிக்காக 'ஆனந்தம் – மகிழ்ச்சி' என்ற திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் ரூ.500/- முதல் ரூ.5,000/- வரை ECS முறையில் ஆனந்தம் வங்கிக்கணக்கில் செலுத்துகிறார்கள். மற்ற நன்கொடையாளர்களுக்கு வழங்குவது போலவே மகிழ்ச்சி திட்டம் மூலம் உதவுபவர்களுக்கும் 80 G சட்டப்படி வருமானவரி விலக்குச் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

# "ஆனந்தம்" மாணவர்களில் சிலர்...


Pavithra M
B.E - E.E.E


Sriram S
B.E - MECH


Kalimuthu K
DIP - E.C.E


Renugopal A
DIP - E.E.E


Muthumeena R
M.Sc - CSE


Nivetha A
B.Sc - Chemistry


Bhuvaneshwari. T
IAS


Yuvarani T
B.Sc - Horticulture


Arockiasamy R
B.Sc - Physics


Saravanakumar L
M.B.B.S


Nagaraj T
M.B.B.S


Asaimani M
M.B.B.S


Kanchana N G
M.B.B.S


Deepa B
B.E - E.E.E


Thillai Ganesh N
B.E - Civil


Upendra Gopal R
B.Com( CA)


Hemalatha R
B.E - E.C.E


Ramkumar R
B.E - Mechanical


Pavendhan P
B.E - E & I


Kayathri P
B.E - E.C.E


J.Pugazhendhi
BVSC


Aravintharaj K
B.E - Mechanical


Gobenath A
BE - CIVIL


J.Shaveetha
BHMS


Keerthana A
B.Sc - Chemistry


P.Rajeshwari
B.S.W


M.Archana
B.B.A


Akashchopra P
B.E Mech


E. Jeevanandham
B.Arch


R. Sowndharaya
B.Com

# “ஆனந்தம்” மாணவர்களில் சிலர்...


Jothilakshmi S
B.Com


K.Ayyanar
B.E Mech


Sivachidambaram S
B.E- Civil


Kathiresh R
B.E - Mechanical


R.Janani
B.E ECE


Udhayabharathy S
B.Tech - Agricultural Eng.


Sabthagirivasan M
Dip - Agri


Vetrivel G
B.Sc - Chemistry


Ajitha R
B.Sc - Fashion


Akilandeswari R
B.E - E.C.E


Manimekalai K
D.El.Ed


S.Meenakumari
B.Sc - Maths


Roshini N
B.Sc - Maths


A.Monisha
B.E Bio-Med


Prasanth K
B.E - Civil


Surendhar D
B.Sc - Agri


Venkatesh C
B.C.A


Manickavel M
B.E - Mechanical


Muthukumar K
B.E - Civil


Manivannan S
B.E - Civil


S.Abinaya
B.E CSE


Subalakshmi S
B.C.A


Suresh V
B.E - Civil


Santhiya P
B.E - E.C.E


Durga R
B.E - CSE


Karpahambal S
B.E - E.C.E


Arunkumar M
B.E - Automobile Eng.


P.Akila
B.E CSE


M. Subash Chandra Bose
B.A.History


Deepan Yadhav G
M.B.B.S

# “ஆனந்தம்” மாணவர்களில் சிலர்...


Karthik G
B.E - Mechanical


Vignesh M
B.E - Mech


Priya M
B.Com


Nivetha V
B.Sc - Nursing


Parameshwari G
B.Sc - Nursing


Dhesiyageetham R
B.Tech - Textile


Nisha Freeda S
B.Sc - Maths


Nishanthan S
B.E - Mechanical


Usha K
B.E - E.C.E


Gokul P
B.E - Mechanical


Ilayaraja M
B.E - Mechanical


Mahizhvani D
B.Sc - Maths


Marimuthu M
Dip - Mechanical


Tamilselvan R
Dip - E.E.E


Sarasvathi S
Dip - E.E.E


Vetrichelvi M
B.Sc - Comp.Science


Radesh R
B.E - Mechanical


Lakshmi S
B.E - E.C.E


Sarathkumar R
M.B.B.S


Sri Krishna R
B.E - E.C.E


Anbarasan A
B.E - Bio Medical


Dhivya K
B.Com, LLB (Hons)


Kalidass M
B.E - Metallurgica


Vigneshwaran S
B.Tech - Mechanical


Rajalakshmi A
B.E - E.C.E


Ranjithkumar B
B.E - Mechanical


Sabarinathan V
B.Sc - Physics


Nithya M
B.E - E.C.E


Rajarajeswari B
B.E - ECE


Porgunam R
B.A English



“ நல்ல மாணவர்களை மட்டுமல்லாமல், நல்ல மனிதர்களையும் ஆனந்தம் உருவாக்கிக் கொண்டிருப்பதைப் பார்த்து, ஆனந்தம் அமைப்பில் என்னையும் ஈடுபடுத்திக்கொண்டு செயலாற்றி வருகிறேன். ”

- முனைவர். **H. தேவராஜ்,** Vice Chairman - University Grants Commission, Delhi



“ சுவாமி விவேகானந்தர் கூறியதைப் போன்ற இளைஞர்களை உருவாக்கிட வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் மாணவர்களுக்கு கல்வியோடு தன்னம்பிக்கை ஒளியையும் ஏற்றி வைக்கிறது ஆனந்தம். ”

- **திரு. மயில்சாமி அண்ணாதுரை,** Scientist & Director - ISRO



“ வசதி வாய்ப்பற்ற மாணவர்களுக்கு கல்வி கொடுப்பதன் மூலம் அடுத்த தலைமுறை இந்தியாவை வலுவாக உருவாக்கிட ஓர் நல்ல முயற்சி எடுத்திருக்கிறது ஆனந்தம். ”

- ‘சொல்வேந்தர்’ **திரு. சுகி சிவம்,** தமிழ் அறிஞர்



“ ஆனந்தம் மாணவர்களின் கனவையும், உணர்வையும் சரியாக புரிந்துகொண்டு, அவர்களின் இலக்கை அடைய வழிகாட்டுதலோடு செயலாற்றி வருகிறது ஆனந்தம் அமைப்பு. ஆனந்தம் மூலம் உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு 100% கல்வி உதவித்தொகை வழங்குவதோடு, சமூக அக்கறையோடும்வாழக்கூடிய சிறந்த மனிதர்களாக அவர்களை உருவாக்குவதே ஆனந்தம் அமைப்பின் நோக்கம். ”

- Dr. **திரு. விஜயகுமார்,** I.A.S, தமிழக முதலமைச்சரின் முதன்மை செயலாளர்



“ யாரோ ஒருவருக்கு உதவி செய்துவிட்டு அது சரியான நபர்களுக்குப் போய்ச்சேருகிறதா என்று கவலைப்பட்டுக் கொண்டிருப்பதைவிட, 'ஆனந்தம்' மாதிரியான அமைப்புடன் நம்மை ஈடுபடுத்திக் கொள்வதன் மூலம் நம்முடைய உதவிகள் சரியானவர்களுக்குச் சென்றடைகின்றன என்கிற மனநிறைவோடு இருக்கலாம். ”

- **திருமதி பாரதி பாஸ்கர்**

ஆனந்தம்
இளைஞர் நல அமைப்பு


**ஆனந்தம் இளைஞர் நல அமைப்பு**

15/21, பசுமார்த்தி தெரு 2வது சந்து, ரங்கராஜபுரம், கோடம்பாக்கம், சென்னை - 600 024.

**தொலை பேசி:** +91 (044) 455 88 555. **கைப்பேசி:** +91 95519 39551.

**E-mail:** info@anandham.org, anandhamfoundation@gmail.com.